**O.S. No. 36/2020 Dt: 3.8.22**

**வா.சா.1 அசோக்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேன். அத்துடன் கட்டிடத் தொழிலும் செய்கிறேன். நான் தனலெட்சுமி சிட்பண்ட்-ல் 2014-2018 ஆண்டுகளில் வேலை பார்த்தேன். தனலெட்சுமி சிட்பண்ட் நிறுவனம் தனியார் நிறுவனம் அதில் நான் Development Officer ஆக வேலை பார்த்தேன். எனக்கு மாத வருமானம் இல்லை. கமிஷன்தான் வருமானம். நான் அரசு பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் அல்ல. சாட்சி தானாக பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்கிறார். எனக்கு சொந்தமாக விவசாய நிலங்கள் இல்லை. எனக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை. எனக்கு வருமானம் என்பது கட்டிடத் தொழில் பார்ப்பதில் வருவதுதான். நான் 2014, 2015, 2016 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் வருமான வரி செலுத்தி வந்தேன். அதன் பிறகு எனக்கு வருமானம் வரி செலுத்தும் அளவிற்கு இல்லை என்பதால் வரி செலுத்தவில்லை. 2014 க்கு முன்பும் வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாததால் வரி செலுத்தவில்லை. எனக்கு சொந்தமாக கார் இல்லை. தற்போது ரூ.7000/- மாத வாடகை கொடுத்து குடியிருக்கிறேன். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வழக்கில் கண்ட பரிவர்த்தனை தவிர வேறு எதுவும் இல்லை. நான் பி.யூ.சி. வரை படித்திருக்கிறேன். எனக்கு பிரதிவாதியை 2010 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். பிரதிவாதி ஸ்ரீராம் சிட்பண்டில் வேலை பார்த்ததிலிருந்து எனக்கு அவரை தெரியும். நான் ஸ்ரீராம் சிட்பண்டில் சீட்டு சேர்ந்த வகையில் பிரதிவாதி எனக்கு பழக்கம். ரூ.62,00,000/-ஐ நான் இரண்டு மூன்று தவணையாக பிரதிவாதிக்கு கொடுத்தேன். ஒவ்வொரு தவணை நான் பணம் கொடுப்பதற்கு ஒரு வாரம் முன்பு பிரதிவாதி என்னிடம் பணம் கேட்பார். முதல் தவணையாக ரூ.28,00,000/-ஐ ரொக்கமாக கொடுத்தேன். முதல் தவணை பணம் கொடுத்த பிறகு 20 அல்லது 25 நாட்கள்

கழித்து ரூ.20,00,000/-ஐ ரொக்கமாக கொடுத்தேன். மீண்டும் சுமார் 20 நாட்கள் கழித்து மூன்றாவது தவணையாக ரூ.14,00,000/- ரொக்கமாக கொடுத்தேன். அந்தத் தொகைகள் நான் என்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து எடுத்து தரவில்லை. நான் மற்றவர்களிடமிருந்து வாங்கி ரொக்கமாக கொடுத்தேன். சீட்டு எடுத்த வகையில் அவர்களிடமிருந்து வாங்கியிருந்தேன். நான் ரொக்கமாக கொடுத்த பணத்தின் Denomination சொல்லமுடியாது. எல்லாம் கலந்து தான் இருந்தது. ஆயிரம் ரூபாய் நோட்டும், எல்லாம் கலந்திருந்ததா என்றால் ஞாபகமில்லை. ஒவ்வொரு தவணையும் பணம் கொடுக்கும்போதும் நான் நட்பு முறையில் எழுதி வாங்கவில்லை. மூன்றாவது தவணை தொகை கொடுக்கும்போதும் நான் எழுதி வாங்கிக் கொள்ளவில்லை. சில நாட்கள் கழித்து தான் பிரதிவாதி அவராக மேற்படி தொகைகளுக்காக எழுதிக் கொடுத்தார். எழுதிக் கொடுத்ததாக நான் சொல்லும் ஆவணம் ரூ.100/- முத்திரைத்தாளில் பிரதிவாதி அவரது கைப்பட எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ.1 எழுதப்பட்ட முத்திரைத் தாள் நாகப்பட்டினம் முத்திரை தாள் விற்பனையாளரால் வழங்கப்பட்டுள்ளது. முத்திரை தாளில் ஜெயப்பிரகாஷ் மற்றும் அசோக்குமாரின் விலாசம் தஞ்சாவூர் என உள்ளது. அதில் பிரதிவாதி ஜெயப்பிரகாஷின் விலாசம் தஞ்சாவூர் நாலுகால் மண்டம் வி.பி. கோயில் தெரு என கண்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தைக் காண்பித்து அதில் "எனது குடும்ப அபிவிருத்திக்காகவும் நான் பிறரிடம் வாங்கிய கடன் தொகையை அடைப்பதற்காகவும் தங்கள் வசம் இன்றைய தேதியில் ரூ-62,00,000/- கடனாகப் பெற்றுள்ளேன்" என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் எழுதியது உள்பட யார் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1வது சாட்சி நேதாஜி என் நண்பர். 2வது சாட்சி சோழன் என்பவரும் எனக்கு நண்பர்தான். என்னுடைய கட்சி படி ரூ 1,00,000/-ஐ பிரதிவாதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். அந்த ஒரு லட்சத்திற்கான வரவு வா.சா.ஆ.1ல் வைக்கப்படவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்/- A. மலர்விழி)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**